(Chapter XXIII code of Criminal procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO-II, CHENGALPATTU.**
**DEPOSITION OF WITNESS**
**CC No. 6-2016**

| | |
|---|---|
| Deposition of witness for | : **(PW- 8 )** |
| Name | : Gopu |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Dated | : 10-06-2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10-06-2022**

முதல் விசாரணை

நான் ரியல் எஸ்டேட் தொழீல் செய்து வருகிறேன் இந்த வழக்கை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை, ஆஜரில் இருக்கும் எதிரிகளான A2,A3,A4,A5 ஆகியோரை எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத வேண்டி கேட்டு கொண்டதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கடந்த 15 வருடங்களாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அதில் எனக்கு நல்ல வருமானம் வந்தது. நான் சொல்வது போல் எனக்கு ரியல் எஸ்டேட் தொழிலில் வருமானம் சரியாக வருமானம் வரவில்லை என்றாலும், அதற்காக நான் வீடுகளை வாடகைக்கு விட்டு பிழைப்பு நடத்தினேன் என்றால் சரியல்ல. கூடுவாஞ்சேரியில் மின்துறையில் வேலை செய்த வாசுவினை எனக்கு தெரியாது அவர் லைன் மேனாக இருந்த விவரம் எனக்கு தெரியாது வாசுவின் மகன் எனக்கு யாரென்று தெரியாது. அவர் என்ன வேலை பார்த்தா என்றும எனக்கு தெரியாது, வீரபத்திரன் மூலம் ஆறுமுகம் எனக்கு அறிமுகம் ஆனார் என்றால் எனக்கு

தெரியாது. ஆறுமுகத்தின் மகனுக்கு உடல்நிலை சரியில்லாததினால், பண தேவைக்காக வீரபத்திரன் என்பவர் ஆறுமுகத்தை என்னிடம் அழைத்து வந்தார் என்றால் அழைத்து வரவில்லை. ஆறுமுகத்திடம் அவரின் நிலத்தின் பத்திரத்தை வைத்து கொண்டு பணத்தை கொடுத்தேன் என்றால் இல்லை. நான் 20ஆயிரம் கொடுத்தேன் என்றால் இல்லை, நான் கடனை நட்பின் பேரில் கொடுத்தேன் என்றால் நான் எந்த பத்திரத்தையும் பார்க்கவில்லை கடனும் கொடுக்கவில்லை. ஆறுமுகம் மற்றும் வீரபத்திரனும் ரூ24ஆயிரத்தை என்னிடம் கொடுத்துவிடடு அவர்களது வீட்டு பத்திரத்தை பெற்று கொண்டு சென்றனர் என்றால் எந்த பத்திரத்தையும் பார்க்கவில்லை கடனும் கொடுக்கவில்லை. ஆறுமுகம் எனக்கு தெரியும் என்றாலும் அவருக்குமட பணம் கொடுத்த விரம் தெரியும் என்றும், ஆறுமுகம் மற்றும் வீரபத்திரன் எனது றண்பர்கள் என்பதால் போலிஸ் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நட்பின் காரணமாக பத்திரத்தில் கூறப்பட்டுள்ள சொத்தின் விவரத்தை சரிவரபார்க்காமல் ரூ.20ஆயிரம் பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பொதுவாக, நான் எந்த பத்தரத்திலும் கூறப்பட்டுள்ள சொத்தின் விவரத்தை பார்த்து தான் எந்தவொரு விஷயத்தையும் செய்வேன் என்றால் சரிதான்.

(Chapter XXIII code of Criminal procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO-II, CHENGALPATTU.**
**DEPOSITION OF WITNESS**
**CC No. 6-2016**

| | |
|---|---|
| Deposition of witness for | : **(PW- 9 )** |
| Name | : Yuvaraj |
| Father's Name | : Govindasamy |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Dated | : 10-06-2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10-06-2022**

முதல் விசாரணை

நான் காயரம்பேடு தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் பொறுப்பாளராக இருந்தேன். 2020 ஜனவரியில் ஓய்வு பெற்று விட்டேன். இந்த வழக்கு சமபந்தமாக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்ததது அந்த அழைப்பின் காரணமாக தான் அந்த அலுவலகத்திற்கு சென்றேன். போலிஸார் என்னை விசாரணை செய்தனர். எனது கூட்டுறவு கடன் சங்கத்தில் இருக்கும் போது ஆஜரில் இருக்கும் எதிரி 2ஆன வீரராகவன் என்பவர் என்னிடம் வந்து SB account ஓப்பன் செய்து தருமாறு கேட்டார்கள் அப்போது நான் அடையாள அட்டை, போட்டோ வேண்டும் மற்றும் அறிமுகளாளர் தேவை என்று கூறினேன். அப்போது, ஆஜர் எதிரி வீரராகவனும், ஆறுமுகமும் எனது வங்கிக்கு வந்த போது ஆறுமுகம் தான் வெளியூர்காரர் என்றும், அதனால் தனக்கு ரேஷன் கார்டு இல்லை என்றும், கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் இருக்கு என்று கூறினார். நான் இதன் அடிப்படையில் ஆறுமுகத்திற்கு SB account ஓப்பன் செய்து கொடுத்தேன். அந்த சமயத்தில் open account ஆக குறைந்தபட்சம் 100 ரூபாய் இருந்தால் போதும். 2003ல் வங்கி கணக்கு துவக்கம் செய்யப்பட்டது

குறுக்கு விசாரணை

வீரராகவன் என்பவர் எந்த சமயத்திலும் எனது வங்கிற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் ஆறுமுகத்திற்று வீரராகவன் மூலம் வங்கி கணக்கு துவக்கம் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் அடையாளம் காட்டிய எதிரியின் பெயர் வீரராகவன் இல்லை என்றால் வீரராகவன் தான்.

<u>மறுவிசாரணை</u>

நான் போலிஸ் விசாரணையில் 1வது எதிரியின் பெயர் வீரபத்திரன் என்றும் சொல்லிவிட்டு தற்போது நீண்ட நாட்கள் ஆன காரணத்தினால் 1வது எதிரியின் பெயரை மாற்றி வீரராகவன் என்று நீதிமன்றதில் முதல் விசாரணையில் அடையாளம் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

தற்போது அரசு தரப்பு வழக்கறிஞர் சொல்லி கொடுத்து எதிரியின் பெயரை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.